DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.5/2015**

**prosecution witness: Pw 8**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**Accused absent 317 petition filed**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அசோக்குமார் | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**<u>04.07.2023</u>**

<u>முதல் விசாரணை **:-**</u>

1. நான் தற்போது சென்னை பெருநகர காவல் ஆணையரகத்தில் சென்னை பாதுகாப்பு பிரிவில் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். இராமேஸ்வரம் நகர் காவல் நிலைய குற்ற எண்.17/2015 பிரிவு 457,380 இதச வழக்கில் முதல் தகவல்அறிக்கை உதவி ஆய்வாளர் திரு. அமல்ராஜ் என்பவர் 11.02.2015-ம் தேதியன்று ரத்தினம் வயது 62, புகார்தாரரின் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து மேல் விசாரணைக்காக என் பார்வைக்கு வைத்தார்.அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ-4 ஆகும்

2. பின்னர் சம்பவ இடம் சென்று சம்படமான குயின்பேலஸ் எதிரே உள்ள SS grand ஹோட்டல் சென்று காலை 10.30 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் குணசேகரன் மற்றும் நாகராஜ் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ-5, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகும். இவ்வழக்கில் சாட்சிகள் ரத்தினம், ஜான்சிராணி, விஜயபிரசாத், தீபா நிரஞ்சனா, முத்துமணிகண்டன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விசாரணை செய்ததில் சம்பவம் நடந்தது உண்மை என் தெரியவந்ததால் சிசிடிவி கேமிராவின் பதிவின் படி இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி மூணாருக்கு சென்றிருப்பதால் நான் மற்றும் பார்டி சகிதம் வாகனத்தில் புறப்பட்டு 13.02.2015-ம் தேதி அதிகாலை 3

மணிக்கு மூணார் சென்று grand plaza hotel கார் பார்க்கிங் அருகே காலை 03.15 மணிக்கு KL 22 EE 5297 என்ற இன்டிகா காரில் படுத்துக்கொண்டிருந்த இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியை கைது செய்தும், பிறகு எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஐய்யனார், விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ-7 ஆகும். பின்பு அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரியின் ஒப்பபுதல் வாக்குமூலத்தின் படி எதிரி எடுத்து ஆஜர் செய்த வழக்கு சொத்துக்களை அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ-8 ஆகும். அதன்பின்பு எதிரியை கைது செய்து மூணாரில் இருந்து காலை 6 மணிக்கு புறப்பட்டு மாலை 16.00 மணிக்கு நிலையம் வந்து எதிரியை பாரா வசம் ஒப்படைத்தேன். அன்றைய தினமே எதிரியை காவலர் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

3. இவ்வழக்கில் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களான 1. நீல கலர் கல் வைத்த மாங்காய் டாலர் உள்ள தங்க செயின் ஒன்று சுமார் 142 கிராம், 2. நீல கல் வைத்த பூ டாலர் உள்ள தங்க செயின் ஒன்று சுமார் 150 கிராம், 3. பெரிய கல் வைத்த செயின் ஒன்று சமார் 31 கிராம், 4. சிறிய கைசெயின் ஒன்று சுமார் 6 கிராம், 5. சின்ன மயில் டாலர் செயின் ஒன்று சுமார் 61 கிராம், 6. 22 வளையள்கள் சுமார் 284 கிராம், 7. ஜிமிக்கி 3 கல்தோடு சுமார் 22 கிராம், 8. கல் வைத்த மோதிரம் ஒன்று மற்ற 3 மோதிரம் மொத்தம் 4 மோதிரம் சுமார் 28 கிராம், 9. லெட்சுமி டாலர் போட்ட இரண்டைவடை செயின் சுமார் 61 கிராம் 10. சிபிரிங் செயின் இரண்டு சுமார் 39 கிராம் ஆகியவற்றை படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் சமர்பித்தேன். அந்த படிவம் 95 அ.சா.ஆ-9 ஆகும்.

4.இவ்வழக்கில் சிசிடிவி ஆய்வு செய்து அதன் சீடியை ஒப்படைத்த ஊழியர் முத்து மணிகண்டன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கிற்காக சிடியை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். அதன் அசல் அ.சா.ஆ-10 ஆகும். இறுதியாக எனது விசாரணை முடித்து எதிரி மீது பிரிவு 457, 380 படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. புகார்தாரர் காலை 9 மணிக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் இல்லை 10 மணிக்கு கொடுத்துள்ளார். நான் அன்றைய தினம் காலை 7 அல்லது 07.30 மணிக்கு எஸ் எஸ் கிராண்ட் ஹோட்டல் சென்று ஆய்வு செய்தேனா என்றால் ஆய்வு செய்தேன். புகார்தாரர் ஹோட்டலின் கீழ் தளத்தில் தங்கியிருந்தார் என்றால் சரிதான். அவர்கள் தங்கியிருந்தது சூட் ரூம் அதில் மூன்று பெட்ரூம் உள்ளது என்றால் சரிதான். அந்த ரூமில் லாக்கர் வசதி உண்டு என்றால் இல்லை கப்போர்டு உள்ளது. அந்த ரூமில் லாக்கர் வசதி உண்டு நான் அந்த ரூமிற்கு செல்லாததால் தான் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

2. அந்தரூமிபில் உள்புறமாக பூட்டிக்குகொள்ளுவதற்கு வசதியுடன் கூடிய கண்ணாடியினால் ஆன கண்ணாடி ஜன்னல் உண்டு என்றால் சரிதான். அ.சா.2, அ.சா.3, அ.சா.4 ஆகியோர்களை 12ம் தேதியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துவிட்டேன் என்றால் சரிதான். மூணாருக்கு எங்கள் பார்டி சகிதம் யார் யார் வந்தார்கள் என்றால் நான், சார்பு ஆய்வாளர், இரண்டு இராமேஸ்வரம் சேர்ந்த நபர்கள் அடங்கிய குழுவாக சென்றோம். நாங்கள் அனைவரும் ஒரே வாகனத்தில் தான் சென்றோம் என்றால் காவல் துறை வாகனத்தில் சொல்லவில்லை தனியார் வாகனத்தில் சென்றோம்.

3. மூணாரில் அதிகாலை 3 மணிக்கு சென்று 7 மணிக்கு தான் அங்கிருந்து கிளம்பினோம். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி ஓட்டி சென்ற கார் பதிவெண்ணோ, கார் எந்த நிறுவனத்தை சேர்ந்தது என்ற எந்த விபரமும் இல்லை என்றால் சரிதான். எந்த காரில் வந்து பொருட்களை ஒப்படைத்தார் என்று எந்த விபரமும் ஒப்புதல் வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். எஸ் எஸ் கிராண்ட் லாட்ஜ் நிர்வாகம் காணமல் போன நகைகளை அ.சா.2 இடம் ஒப்படைத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எஸ் எஸ் கிராண்ட் ஹோட்டல் திட்சதர் கொல்லை மெயின் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான்.

4. அ.சா.7 இடம் சிசிடிவி கேமிரா பொறுத்துவதற்கான அனுமதி கிடையாது என்றால் சரிதான் ஆனால் சிசிடிவி கேமிரா பொறுத்தும் வேலை செய்து வருகிறார். அ.சா.7 விடம் சிடி, புட்டேஸ் டவுன்லோடு செய்வதற்கான சான்றிதழ் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். சிசிடிவியில் கண்ட உருவத்தை அ.சா.7 மூலம் ஊர்ஜீதம் செய்தேனா என்றால் இல்லை. புகார்தாரரை எப்போது விசாரித்தேன் என்றால் அன்றைய தினமே காலை 10.00 மணிக்கு விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். புகார்தாரரிடம் 13.02.2015-ம் வாக்குமூலமோ,மறுவாக்குமூலமோ பெற்றுக்கொள்ளவில்லை என்றால் 13.02.2015-ம் தேதியும் நான் விசாரித்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டேன். 12ம் தேதி வாங்கிய வாக்குமூலத்திற்கும், 13ம் தேதி வாங்கிய வாக்குமூலத்திற்கும் இடையே கூடுதல் எதும் விசயம் தெரிந்து கொண்டேனா என்றால் நகைகளின் டிஸ்கிரிப்சனை தெரிந்து கொண்டேன். 12ம் தேதி வாங்கிய வாக்குமூலத்தை குற்ற இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. அ.சா.7 தீட்சதர் கொல்லை பகுதியை சார்ந்தவர் என்றால் சரிதான். நான் 13ம் தேதி மூணார் செல்லவும் இல்லை, எதிரியை கைது செய்யவும் இல்லை, பொருட்களை கைப்பற்றவும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் 13ம் தேதி அ.சா.1 னிடம் வாக்குமூலம் வாங்கி நகர் காவல்நிலையத்தில் தான் நான் பணியில் இருந்தேன் என்றால் சரியல்ல. அ.சா.2 காணாமல் போன நகைளை லாட்ஜ் ரிசப்சனில் வைத்துவிட்டார் என்றால் சரியல்ல. அதை லாட்ஜ் ஊழியர்கள் யாரோ எடுத்துவைத்துக்கொண்டு லாட்ஜிற்கு கெட்ட பெயர் ஏற்பட்டு விடும் என்ற காரணத்தால் லாட்ஜ் நிர்வாகம் கேட்டுககொண்டதற்கு இணங்க எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல சிசிடிவி பூட்டேஜ் மூலம் எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த

ஹோட்டலில் சிசிடிவி பூட்டேஸ் இயங்கும் நிலையில் இல்லை வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கை முறையாக விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.